பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

மல்லிகை மாலை

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிகூ–4 குருகுலம், மாம்பாக்கம்; கர, மாசி; 7—3—52. தளிர்–23

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

இறந்தாரும் துறந்தாரும்

பொதுவாக, மக்கள் எல்லாரும் ஒருவரைப்போல் ஒருவர் பிறக்கின்றனர்; ஆனால், இறப்பதில் அப்படி இல்லை; வேறுபடுகின்றார். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பிறப்பில் ஆசிரியர் ஒப்புமை காட்டுவார்.

பிறந்த பின் மக்கள் தத்தம் சிறப்பில் வேறுபடுகின்றனர். அச் சிறப்புக்கேற்றபடி இறப்பும் வேறுபடுகின்றது.

பிறந்தவர் அனைவரும் பொதுவாக மறையவேண்டியவரே யாயினும், மறைவு மாட்சிமைப்படுதலும் உண்டு. மறைவு இழிவு கொள்ளுதலும் உண்டு; துறந்து மறைந்தோர் மாட்சி அடைகின்றனர், துறவாது இறந்தோர் இழிவை எய்துகின்றனர்.

இருவகைப் பற்றும் நீத்தோர், நோய் கொண்டு வருந்தி மீண்டும் பிறப்பதற்கே ஆளாகி இறப்பதில்லை; மன மாசுகள் துறவாதாரே அங்ஙனம் இழிந்த நிலையில் இறந்திதாழிகின்றனர்.

இருத்தலும் மறைந்தாலுப் துறந்தோர்க்குப் பெருமையே; துறவார்க்குக் கீழ்மையே. ஆதலால், மாசு துறந்தாரது மறைவை இறத்தல் என்று கூறுவதில்லை.

துறவாது இறந்தார்க்கு இழிவு எவ்வளவு மிகுதியோ, அவ் வளவு, துறந்து சிறந்தார்க்குப் பெருமை மிகுதி!

'எண்ணிக் கொண்டற்று' என்பதை இரட்டுற மொழிதலாகக் கொண்டு, மேல்விளக்கியபடி பண்பில் எண்ணிப்பார்க்க இயலாதாரை எண்ணிக்கையில் எண்ணி அளவின்மையை அறிந்துகொள்ளுமாறும் உரைக்கப்படும்.

துறந்து சிறவாமல் வீணே இறந்தொழிதல் அளவில்லாத இழிவுக்கே ஏதுவாதலை ஒகைமொழியால் இடித்துரைத்து, மக்களின் அளவுபடாத் துறவின் பெருமைக்கு ஆசிரியர் ஊக்கி உயர்த்துதல் இதனால் தெளியப்பெறும்.

துறந்தார் பெருமை துணைக்
கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண்
டற்று.

துறந்தார் பெருமை—நீத்தாரது பெருமை, துணை கூறின்—ஒப்புக் கூறுமிடத்து, வையத்து இறந்தாரை—உலகத்தில் இறந்து போன மக்களை, எண்ணிக் கொண்டு அற்று—கணக்கிட்டுக் கொள்வதை ஒக்கும்.

'பெருமை எண்ணிக்கொண் டற்று' என முடியும். 'துணை' என்றது, ஒப்புமையளவு.

வையத்து இறந்தாரை என்றார், வையம் தோன்றியது முதல் இறந்தவரை என்னுங் கருத்துத் தோன்ற.

'எண்ணிக் கொண்டு' என்றது, எண்ணிக் கொள்ளல் என இங்கே பெயரளவாய் நின்றது; கொண்டு—உட்கொள்ளல்; அதாவது, உட்கொண்டு அறிதலை உணர்த்திற்று.

பெருமை துறந்தாருடையதே என்பது பெறுதலின், இழிவு துறவாது இறந்தாருடையதாயிற்று. எனவே, இறந்தாரது இழிவைக் கருதிப் பார்க்குமிடத்துத், துறந்தாரது பெருமை இத்துணை என்பது இனிது விளங்கும். 'தேவராணையர் கயவர்' என்னும் நகைச் சுவை ஒப்புமையோடு இதையும் ஒக்கும்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை 4	கர, மாசி, 7-2-52 வெள்ளி	தளிர் 23

தமிழ்க் கலை

கலை என்றால் என்ன? உளியைக் கொண்டு கல்லை உடைத்து வர்ணம் தீட்டிச் 'சிற்பம்' என்ற பெயரளிப்பதுதான் கலையா? காகிதத்தை எடுத்துக் கைக்கு வந்ததைக் கிறுக்கிச் 'சித்திரம்' என்று சிறப்புப்பெயரளிப்பதுதான் கலையா? விருப்பப்பட்ட போது விருப்பமான, அழகிய, இனிய பாடலைக் கொலை செய்யும் இராகத்தில் பாடிச் 'சங்கீதம்' என்று சாற்றுவதுதான் கலையா? அல்ல அல்ல.

கலை என்பது, ஒருவன் தான் உள்ளுற அனுபவித்தவற்றை, மற்றையோரும் அறியும் வண்ணம் செய்யும் செயல் என்றூர் டால்ஸ்டாய் என்பவர். ஹெரால்ட் ஸ்பீட் என்பவர் வாழ்க்கையை நன்முக வெளிப்படுத்தவல்ல ஆற்றல் தான் கலை எனப்படும் என்றூர்.

கலை பல உண்டு; ஆயினும் அவற்றில் சிறப்பானவற்றைத் தொகுத்து அறுபத்து நான்கு என்றனர். ஆகையால்தான் 'ஆய கலைகள் அறுபத்து நான்கினை' யுடையவள் நாமகள் என்றூர் கம்பர். விஞ்ஞான அறிவு மிகுந்துள்ள இந்த இருபதாவது நூற்றாண்டில், அறுபத்து நான்கு கலைகள் தாம் உள்ளன எனக் கூறுவது நகைப்புக் கிடமாகும். அறுபத்து நான்கு கலைகள் தான் முடியுமா? இந்தியா முழுவதும் சுற்றிய ஓர் ஆங்கிலப் அறுநூற்று நாற்பதுக்கும் மேற் பட்டு விட்டன என்று கூறுவது மிகையாகாது. இனிச் போல் கலையின் சிகரத்தை சிறப்பாகத் தமிழரின் கலையைக் காண்போம்.

பழந்தமிழன் கலையைப் போற்றினன். சான்று வேண்டுமா? தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் உள்ள நந்தி; போதாவிட்டால் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்கள்; அவையும் போதாவிட்டால் மதுரையில் உள்ள திருமலை நாயக்கன் மஹால் தமிழ் நாட்டில் அக் காலத்தில் சிற்பக் கலை சிறந்து விளங்கிற்று; சித்திரக் கலை சீர்பெற்றது; இசைக் கலை இசையுடன் இலங்கிற்று; கல்விக்கலை கரைகடந்து துலங்கிற்று; அக் காலத்தே மட்டும் கலை என் சிறந்து விளங்கிற்று எனில், அக் காலத்து மக்கள் போதிய உணவு உண்டு உடை உடுத்துக் கவலையில்லாமல் வாழ்ந்து வந்தமையால் அவர் தம் உள்ளம் கலையை நாடிற்று. இக் காலத்திலோ எனில், உணவு இல்லாமையால் பலவகைப்பட்ட கவலைகள் மக்களின் மனத்தை மயக்க, அவர் எங்ஙனம் கலையில் கருத்தைச் செலுத்துவர்? ஆகவே, பழங்காலத்தில் கலை சிறப்படைந்ததுபோல இக் காலத்தில் சிறப்புறவில்லை. அதற்கு மக்களைக் குறை கூறிப் பயனில்லை.

தமிழ் நாடு உலகத்திலே சிற்பக் கலையில் சிறந்து விளங்குகிறது. பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னர் நம் தமிழ் அரசர்கள் அமைத்த ஆலயங்கள் இன்று வரை இளமை குன்றுமல், காண்போர் கண்களைக் கவர்ந்து கவனத்தை இழுக்கும் சக்தி உள்ளன என்பதை மறுக்கமுடியுமா? அன்றி மறைக்கத் தான் முடியுமா? இந்தியா முழுவதும் சுற்றிய ஓர் ஆங்கிலப் பேராசிரியர், தமிழ் நாட்டைப் போல் கலையின் சிகரத்தை அடைந்துள்ள நாட்டை நான் எங்கும் கண்டதில்லை தமிழ் நாடு, சிறந்த கோயில்கள் நிறைந்துள்ள நாடு என்றூர். தமிழ் நாட்டில் மொத்தம் 32,000 கோயில்கள் உள்ளனவாம். மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்களைப் பற்றி மணிக்கணக்கில் எழுதலாம். காஞ்சிக் கோயிலைக் குறித்துக் கணக்கின்றிப் பேசலாம். தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தைக் குறித்து அளவின்றி எழுதலாம். ஆனால் இடமில்லை.

இனிச் சித்திரக் கலையைக் குறித்துக் காண்போம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அஜந்தாவில் அமைந்த அழகுச் சித்திரங்கள் இன்றுவரை அழியாமலிருக்கின்றன.

அழியாத வர்ண சித்திரத்தை அக்காலத்திலேயே அமைத்தனர் நம் நாட்டினர் எனில் அவர் தம் நாகரிகத்தை என்னென்று நவில்வது?

இசைக் கலையைக் காண்போம். தமிழிலே இசை இல்லை என்று கருதிய காலம் பறந்துபோய், தமிழிலே சிறந்த இசை உண்டு என்று உலகம் உவப்புடன் ஒப்புக்கொள்கிறது. அக்காலத்திலே நம்முன்னோர் தம் ஏடுகளில் நான்குவகைக் குழலையும், ஏழுவகை யாழையும் பல்வகை இராகங்களையும் குறித்து வைத்ததைக் காணலாம்.

இங்ஙனம் பல கலைகளில் சிறந்து விளங்கிய தமிழ்நாடு, இடையிலே ஆகரிப்பாரற்றுப் பேயிற்றே ஒழிய அழிந்து போகவில்லை. இப்போது அதற்கு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. என்போம் நாமும் கன்னித் தமிழ்க்கலையை வளர்க்க முற்படுவோம்

வே. சி. மூர்த்தி.

மகிழ்ச்சி

ஆங்கில மொழி வளத்தோடு செந்தமிழ்ப் புலமையும் வாய்ந்து ஆவணப் பதிவாளராக இது வரையிற் பணியாற்றி வந்த செம்பூலச் செல்வர் திரு J. முத்து வேராமி டியு B. A. அவர்கள், ஈரோடு மாவட்ட ஆவணப் பதிவுத் தலைவராக உயர்த்தப் பெற்றிருப்பதறிந்து குருகுலம் பெரு மகிழ்ச்சி யடைகின்றது.

அன்பர் அவர்கள் தமிழா ராய்ச்சி வல்லுநர். ஓய்வு நேரத் தின் ஒவ்வொரு விநாடியையும் இன்தமிழ் நூல்களின் குளிர் நிழலிலேயே செலவிடும் பண் புடையவர். குருகுலச் செழிப் புக்கான துறைகளில் ஆழ்ந்த கருத்துடையவர். அவர் தம் பதவியுயர்வு பொதுவாகத் தமிழ் வட்டாரத்திற்கும் சிறப்பாகக் குருகுலத்துக்கும் ஆக்கந் தருவ தாகும். இறைவனருளால் அவர் நிலைமை மேலும் உயர்வதாக!

நல்லுணவு

மக்களுக்கு நல்லுணவு உழு திலும் ஆலைப்பலாலும் கிடைக்கின்றது. உழவிலுற் கிடைப்பது பயிர்ச் செல்வம்; ஆனைத்தாற் கிடைப்பது பாற் செல்வம். பயிர்ச் செல்வத் தால் 'தானியம்' 'கறிகாய்' 'பழம்' 'விந்து' 'கீரை' எண் ணெய்' முதலியனவும், பாற் செல்வத்தால் 'பால்' 'தயிர்' 'மோர்' 'வெண்ணெய்' 'நெய்' முதலியனவும் கிடைக்கின்றன. ஆகவே, நாடு முழுதும் பயிர்ப் பண்ணை பாற்பண்ணைகள் சிறப் பாக நடைபெற்று நல்லுணவுப் பெருக்கம் பெருக வழிசெய் தல் முதன்மை.

மரக்கறி யுணவு உடல் வளர்ச்சியோடு மன வளர்ச்சி முதலியவற்றிற்கும் ஆக்கமா யிருத்தலால், அதன் பெருக்கத் துக்கே முயற்சி யெடுக்க வேண் டும். வலிமைக் குறைவும் தீமை நிலைவுமான புலாலுணவை நீக்குதற்கு மக்களிடத்தில் உறுதியும் தெளிவும் உண்டாக்க வேண்டும்.

இனி, உணவுப் பொருள்களை அவற்றின் வலிமை கெடாமல் திருத்தவும் சமைக்கவும் நன் முறைகள் தேர்தலும், பரவச் செய்தலும் இன்றியமையாதன. வருந்திச் சேடிய பண்டங்களை அவற்றின் வலிமை போக்கிஉண் பது, மிகவும் இரங்கத் தக்கது; கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் கழிகின்றது.

வீடுதோறும் உயர்ந்த உண வமைப்பு முறை, அதாவது. சமையல் திறம் மேம்படுதல் நல்லது.

மேலும், இவை பலவற்றிற் கும் உதவியாயிருக்கும்படி அங் கங்கும் நீர் நிலைகளைப் பெருக்கு தலும் நன்னீர் நிலைகளைப் பாது காத்தலும் வேண்டும்.

குருகுல் - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணை 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணை 4.
3. தனிகைமலை அல்லது அமைதி
விலை அணை 6.
4. நல் வாழ்க்கை
விலை அணை 1.
5. திருக்கழுக்குன்றப் பதிகம் விளக்கம்
விலை அணை 1.
6. கருக் கூலை
விலை அணை 4.
7. மூன்று உண்மைகள்
விலை அணை 3.
8. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணை 9.
9. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணை 8.
10. திருமுருகாற்றுப்படை அகராதி
விலை அணை 8.
11. தொல்காப்பியம் அகத் திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.
12. ஆத்திசூடி . கருத்துரை
விலை 0-0-3.
ஷை நூல் அமைந்த கட்டு 1-2-0.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம், P.O., (S. I. R.)

சிலப்பதிகாரம்

20. கோவலன் கொலையுணல்

'முத்துசாமி'

மாதரி, கண்ணகியையும் கோவலனையும் தன் விருந்தினராகக் கொண்டமையைப் பெறுதற்கரிய செல்வம் பெற்றதாக எண்ணி மகிழ்ச்சியடைந்தனள்.

அவர்களைப் புதுமனையொன்றில் இருக்கச் செய்து, கண்ணகியை நன்னீராட்டித் தன் மகள் ஐயையென்பாளைத் துணையாக இருக்கச் செய்து அடிசிலாக்குதற் காம் பொருள்களையும் அளித்தனள். அடிசிலாக்குதற்குக் கொடுத்த பொருள்களாவன: பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளங்காய், மாம்பழம், வாழைப்பழம், செந்நெல் அரிசி, பால், நெய்.

மேற்கண்ட பொருள்களையே அடிசிலாக்குதற்கு மாதரியும் இன்னும் சில இடைச்சியருமாகச் சேர்ந்து கொண்டுவந்து கொடுத்தனர் என்று ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து இடையரும் கோவலன் முதலியோரும் தூயமரக்கறியுணவே கொள்ளும் பழக்கமுடையவர் என்று தெரிகிறது. புலால் உண்ணும் பழக்கமுடையவராயின் புலால் இடம்பெற்றிருக்குமன்றே? இக்காலத்தில் இடையர்கள் புலாலுணவு உண்கின்றனர். அவர்கள் தங்கள் முன்னோர் தூயமரக்கறியுணவு உட்கொண்டு வாழ்ந்தனர் என்பதை அறிந்து திருத்திக் கொள்ளல் நன்று.

மாதரி ஐயையை வேண்டும் குற்றேவல்கள் செய்யவே இருக்கச் செய்திருந்தனள். கண்ணகி அவளை அடிசிலாக்கச் சொல்லிவிட்டுத் தான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கவுமில்லை; கணவனோடு அளவளாவிக் கொண்டிருக்கவுமில்லை. தன் கையாலேயே அடிசிலாக்கிக் கணவனை உண்பிக்க விரும்பினள். செல்வச் செழுமையிலுள்ளார் எடுத்ததற்கெல்லாம் வேலையாட்களை வைத்துக் கொண்டு சோம்பித் திரிகின்றனர். வாஞ்ஞைப் பெட்டிகளும் அவர்கள் சோம்பலுக்கு உறுதுணையாய் விளங்குகின்றன. வேலைக் காரர்கள் வைத்துக் கொள்ளாமல் தம் வீட்டுவேலைகள் அனைத்தும் தாமே செய்யும் பெண்களை இழிவுபடுத்திப் புறங்கூறி மகிழ்வர். இதனைத் தற்கால மக்கள் நாகரிக வளர்ச்சியென்று கருதுகின்றனர். கண்ணகி தன் கணவனுக்கு அடிசிலாக்கி உண்பித்தமையை ஆசிரியர் கூறுவது கொண்டு காண்போம்.

"மெல்லிரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன"

[கொடுவாய்க் குயம்—வளைந்த வாயினையுடைய அரிவாள்]

கண்ணகி தனது மெல்லிய விரல்கள் சிவக்கும் வண்ணம் பல்வேறு பசுங்காய்களையும் அரிவாளால் அரிந்தனள்; திருமுகம் வியர்த்தது; கண்கள் சிவந்தன; இவ்வாறு அடிசிலாக்கினள். ஐயையும் உடனிருந்து வேண்டும் உதவிகள் செய்தனள்.

பின்னர், பனையோலையாலாய தடுக்கினில் கோவலனை இருக்கச் செய்து அடிவணங்கித் தண்ணீர் தெளித்துத் தடவிய இடத்தில் வாழைக் குருக்கை விரித்திட்டு அதில் உணவினைப் படைத்து உண்டருள்க வென்று அன்போடு வேண்டிக் கொண்டனள்.

பனையோலைத் தடுக்கை, "கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த செய்வினைத் தவிசில்" என்று குறிப்பிட்டிருப்பதால் அக் காலத்தில் பனையோலையால் சித்திரப்பாடமைந்த தடுக்குகள் பெண்களே செய்தனர் என்று தெரிகிறது. ஓய்வு நேரங்களில் இவ் வேலைகளில் ஈடுபட்டிருப்பர்.

உண்டபின் கண்ணகி கணவற்கு வெற்றிலை பாக்குக் கொடுத்து அளவளாவிக் கொண்டிருந்தனள். இவ்வாறு கணவற் காம் பணிகளைத் தானே செய்வதில் பெருமகிழ்ச்சி காணும் உயர்ந்த பண்புடையவளாயிருந்தனள்.

வெற்றிலை பாக்குக் கொடுத்து அளவளாவிக் கொண்டிருக்கும் போது கோவலன் கண்ணகியின் உயர்ந்த பண்பினையும் தன் சிறுமையினை அவளுக் கிழைத்த தீங்கினையும் எண்ணி வருந்தினன். "பருக்கைக் கற்கள் நிறைந்த வெஞ்சுரத்தின் வழியே நெடுந்தூரம் உன்னை யழைத்து வந்தேன். உன் மெல்லிய பாதங்கள் எவ்வாறு நொந்தனவோ? என் இருமுது குரவரும் என்னுற்றனரோ? இவ்

வாறெல்லாம் எனக்கு நேர்வது முன்வினைப் பயனே? என் உள்ளம் கலங்குவதால் யாதும் அறியேனே. நல்லொழுக்க நெறி தவறி நடந்த எனக்கும் உய்தியுண்டோ? இருமுது குரவர் எவனும் பிழைத்தேனே. பிறந்த ஊரை விட்டு இங்ஙனம் வருதல் குற்றமென்பதைச் சிறிதும் நோக்காது மதுரைக்குப் போக வேண்டும் எழுக வென்றதும் எழுந்துடன் வந்தனை. நீ செய்தது எவ்வளவு அரிய செயல்!" என்று பலவாறுக வருந்தினன்.

இல்வாழ்வாது சலியாய கடன் விருந்தோம்பல். இவ்வறத்தினைக் கணவனும் மனைவியும் சேர்ந்து செய்தல் வேண்டும். கோவலன் கண்ணகியைப் பிரிந்த காலை கண்ணகியால் விருந்தோம்பலாகிய அறத்தினை மேற்கொள்ள இயலாது போயிற்று. அதனை நினைந்து வருந்தினள்.

"அறவோர்க் களித்தலும்
அக்கண மோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்த வென்னை"

இவ் வடிகள் கண்ணகி விருந்தோம்ப இயலாது போயினமைக்கு வருந்தினமையைப் புலப்படுத்தும். தன்பால் அன்பு செலுத்தாமல் கணிகைப் பெண்பால் மனம் வைத்துப் பிரிந்தமைக்கு வருந்தவில்லை. அக்கணிகைப் பெண்ணை அழுக்காறு கொண்டு வையவுமில்லை. கணவன் பிரிவால் இல்லறம் நெறி முறையில் நடவாது போயினமையை எண்ணி வருந்திய அவளது மேலான பண்பை எவ்வாறு எடுத்தியம்ப இயலும்!

கோவலன் போற்றும் ஒழுக்கம் புரிந்தனனாயினும் தான் கணவன் சொல்லைச் சிறிதும் மாற்ற நினையாத உள்ள வாழ்க்கையளாதலால் எழுக வென்றதும் எழுந்துடன் போந்தனள். அவ்வாறு கணவன் குறிப்புவழி நடக்கும் மேலாம் பண்புடையவளாதலால் என்றும் கண்ணகி சிறந்த சான்றோராகிய கவுந்தியடிகளால் "கற்புக் கடம் பூண்ட இத் தெய்வமல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்" என்று புகழப்படும் பேற்றைப் பெற்றனள்!

கோவலன், தோழியரும் ஏவற் பெண்டிரும் புடைசூழக் கண்ணகி இருந்த முன்னை நிலையையும் இப்பொழுது வேற்றூரில் தனித் திருக்கும் நிலையையும் எண்ணிக் கலங்கினன். பின்னர், அவள் காற்சிலம்பொன்றை வாங்கிக்கொண்டு "மாறி வருவன் மயங்காது ஒழிக" என்று கூறி அவளைத் தழுவி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனன்.

போகும் வழியில் எதிரே ஆனேறு ஒன்று தன்மீது பாய வருவதுபோல ஓடிவந்தது. அவ்வாறு எதிர்ப்பட்டால் தீச் சகுனமாக எண்ணுவர் இடையர். அதனைக் கோவலன் அறியாமையால் கவனியாது சென்றான்.

பீடிகைத் தெருவில் செல்லும் போது, கோவலன் கைக்கோல் ஏந்திய பொற்கொல்லன் ஒருவன், பணித் தட்டார் நூற்றுவர் புடைசூழ எதிர்வரக் கண்டனன். அவன் பாண்டிய மன்னனது வரிசை பெற்ற பொற்றொழில் வல்லவனாயிருத்தல் வேண்டுமென்று எண்ணிக் கோவலன் அவனை யணுகி "அரசன் பெருந்தேவிக்கு அணியலாவதொரு காற் சிலம்பினை விலை மதிப்பிடுதற்கு வல்லையா" என்று கேட்டுத் தான் கொணர்ந்த சிலம்பினைக் காட்டினன்.

அப் பொற்கொல்லன் முன்னரே அரசமாதேவியின் காற் சிலம் பொன்றைக் கவர்ந்தவன். அப் பழியை யார்மீது ஏற்றித் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று தருணம் பார்த்திருப்பவன். கோவலன் சிலம்பினைக் காட்டவும் அச் சிலம்புக்கும் அரசமாதேவியின் சிலம்புக்கும் உள்ள ஒற்றுமை பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். அவ்வாறு சிந்தித்திருப்பவனைக் கோவலன் விலை மதிப்பிடற்குச் சிந்திப்பதாக எண்ணிக் கொண்டான். மாசற்ற உள்ளம் பிறர் உள்ளத்து மாசினையும் அறியாது போலும்.

பொற்கொல்லன் கோவலனை நோக்கி "இது கோப்பெருந்தேவிக்குத்தான் பொருந்தும். இதனை அரசற்குத் தெரிவித்து வருமளவும் என் சிறு குடிலிலிருக்க" என்று சொல்லிச் சென்றனன்.

அக் காலத்து மதுரையை ஆண்டு வந்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான். அம்மன்னன் தன் தேவியின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD.
COIMBATORE.

விரைவாய் அந்தப்புரம் சென்று கொண்டிருந்தான். அவ்வமயம் அரசன் முன் அப் பொற்கொல்லன் சென்று மண்ணுற வீழ்ந்து வணங்கிக் "கன்னகம் (கன்னக் கோல்) இன்றியும் கவைக் கோல் இன்றியும் தன்னிய மந்திரம் தானெனக் கொண்டு வாயிலாளரை மயக்கிச் சிலம்பினைக் கவர்ந்த கள்வன் என் சிறுகுடியிலுளன்" என்றனன்.

கேட்ட அரசன் பொற்கொல்லன் கூறிய கூற்றில் உண்மை யிருக்குமா வென்று ஆராய வில்லை. நீதி வழுவா நெறிமுறையில் ஆட்சி செலுத்துபவன் என்று புகழப் பெற்றவன் அப் பாண்டிய மன்னன். முன்னர் உறையூரில் ஒரு மறையவன் பாண்டியர் புகழினைப் புகழ்ந்து பாடியதையும், பின்னர்க் கோவலன் மதுரையைச் சுற்றிப் பார்த்து விட்டுக் கவுந்தியடிகளிடம் பாண்டிய மன்னனின் செங்கோலையும் குடையின் தண்ணளியையும் புகழ்ந்து கூறியதையும் பார்த்தோம். அத்தகு புகழ்பெற்ற நீதி தவறு மன்னன் பொற்கொல்லன் கூறிய அடாத பழி மொழியைச் சிறிதும் ஆராயாமல் காவலாளரை நோக்கிப் பின் வருமாறு கூறிச் சென்றனன்.

"தாழ்பூங் கோதை தன்
காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய
தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க
ஈங்[கு]" என

இது அரசன் கட்டளை. செங்கோன் முறை சிறிதும் வழுவாத அரசன் அவ்வாறு ஆராயாமல் கூறியதற்குக் காரணம் முன்வினையன்றி வேறு என்னவாயிருக்கமுடியும்? ஆசிரியர், "வினைவலி காலமாதலின் யாவதும் (சிறிதும்) சினையலர் வேம்பன் தோழகி" என்கின்றனர். இவ்வாறே பாயிரத்திலும் வந்தமை காண்க.

பொற்கொல்லன் தான் எண்ணியது எளிதில் முடிந்ததென மகிழ்ந்தனன். காவலாளரோடு தன் சிறுகுடில் போந்து கோவலனிடம் "இவர்கள் அரசன் ஏவலால் சிலம்பினைக் காணும் பொருட்டு வந்திருக்கின்றனர்" என்றனன். கோவலனும் சிலம்பினைக் காட்டினன். பொற் கொல்லன் கோயிற் சிலம்புடன் அது ஒத்திருப்பதை விரித்துக் கூறினன். காவலாளரிற் சிலர் கோவலன் இருப்பு முறையானும் மற்றும் இலக்கண முறையானும் கொலை செய்தற் குரிய கள்வனல்லன் என்று கூற, பொற்கொல்லன் அவர்களை இகழ்ந்து நகைத்து, மந்திர், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி, யென்ற எட்டையுமன்றே களவு கொண்டு வாழ்வோர் துணையாகக் கொள்வர் என்று அவர் உள்ளம் மாறும் வண்ணம் எடுத்துக் கூறினன். பொற்கொல்லன் வஞ்சனையில் மிக வல்லவன் என்று அவன் அரசனையும் ஏவலாளரையும் ஏமாற்றித் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டதிலிருந்து தெரிகிறது. அதனால் இக்கால நாடக மக்கள் அவனுக்கு 'வஞ்சிப் பத்தன்' என்று பெயரிட்டு வழங்கினர் போலும்.

அப்பொழுது ஒரு இளைஞன் "முன்னர் ஒரு நாள் மாரிக் காலத்து நள்ளிருளில் உளியினையும் நீல நிறக் கச்சினையும் உடையவனைப் ஒருவன் தோன்றினன். அவனைக் கொல்ல என் வாளை உருவிய போது அதனை அவன் பற்றினன். பற்றிய அத் தருணத்திலேயே மறைந்துவிட்டனன். ஆகவே கள்வர் செய்கையை யாரும் அறிய முடியாது. இவனைக் (கோவலனை) கொல்லாது விட்டால் அரசன் தண்டனையும் நமக்குண்டாம். ஆகலால் நாம் என்ன செய்வ தென்பதைக் கூறுங்கள்" என்று கேட்டனன்.

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்வர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது கல்லாக் களிமகன் ஒருவன் தன் வெள்வாளைக் கோவலன் மீது எறிந்தனன். அது அவனைக் குறுக்காக அறுத்தது. உதிரம் கொப்புளிக்க நிலமடந்தை மிக்க துயருறவும், மன்னவன் செங்கோல் வளையவும் அந்தோ! கோவலன் ஊழ்வினை உருத்து வந்தூட்ட மண் மீது மடிந்து வீழ்ந்தனன்.

கோவலனைச் "சிலம்பு உனக்கு எப்படிக் கிடைத்தது? இது தேவியின் சிலம்பென ஐயுறுகின்றோம். அதற்கு நீ யாது மாற்றங் கூற வல்லாய்? என்று கேட்பார் யாருமில்லை. அவனும் தானுகவே தன்பால் குற்ற மின்மையை எடுத்துக் கூறவில்லை, எதிர்பாராது ஏற்பட்ட பழியால் திகைத்திருந்தனன் போலும். அப்போது ஊழ்வினை கல்லாக் களிமகன் கைவாள் வழி உருத்து வந்து அந்தோ! கோவலனை வெட்டி வீழ்த்கியது. அம்மையிற் செய்த தீவினை இப்படி இம்மையில் கோவலனைத் தொடர்ந்து வந்து தன் பயனை ஊட்டியதைச் சிலப்பதிகாரம் இங்ஙனம் தெளிவாகக் கூறுகின்றவும் மக்கள் உணவிற்காகவும் மற்றும் தங்கள் வசதிக்காகவும் எத்தனை உயிரை நாளும் கொல்கின்றனர். பொருமையால் நிகழும் மக்கட் கொலை தான் எத்தனை? கொலை செய்து விட்டு ஆட்சியினரை ஏமாற்றி விட்டாலும் அத்தீவினை மறுமையிலும் தொடர்ந்து வந்து தன் பயனை நுகர்விக்கும் என்பதை இனியேனும் அறிக.

"நான் பெற்ற * * * இன்பம்....."

'பா. வரதராசன்'

நாம், நம் இன்றைய நிலையை—வாழ்க்கையை—நன்கு ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். தோற்றத்திற்கு இனிமை பயப்பதில், சிந்தனையைச் செலுத்தி, உண்மைகளுக்கு, மனதைப் பறி கொடுத்து நிலை இழக்கக் கூடாது. பெரிதுப், தோற்றம் ஒன்றும், உண்மை பிறிதொன்றுமாயிருத்தல் இயல்பு.

நாம், இன்று, நம் முன்னோர் செவ்வனே வகுத்த வழியினின்று பிழைத்துப் பிறிதோர் மக்களின், கூட்டுறவால் அன்னர் செல்லும் பாதையைப் பொருளறியாது, உண்மை உணராது வழுக்கிப் பின்பற்ற முயலுகின்றோம். இன்று 'நாகரிக மென்று' மேற் கொள்ளும் வாழ்க்கை, நாமே அனுபவப் பட்டுத் தெரிந்து மேற்கொண்டதாயில்லை. மேல்நாட்டு மக்களின் நாகரிகத்தை நாம் பார்த்த அளவிலும், கேட்ட அளவிலும், நம்பிக்கை கொண்டு, அதைப் பின்பற்ற முயன்று வருகின்றோம். அதன் உண்மை அறியாது அது நமக்கு ஒரு கவர்ச்சியளிக்கும் காரணத்தால் மேற் கொள்ளுவது வீரமாகாது. நம் சுயஅறிவினுல் நன்மை தீமைகளைப் பகுத்தறியாதது எங்ஙனம் வீரத்தின் பாற்படும்?

இன்று, மேல்நாட்டாரின் கடும் முயற்சியால் விஞ்ஞானம் பெரிதும் வளர்ந்துள்ளது. இவ்வளர்ச்சி, பொருளறிவைப் பொருத்தமட்டில் உண்மையான வளர்ச்சியேயாகும். அதோடு மக்களின் புறவாழ்விலும் ஒரு வளர்ச்சியையும் வளத்தையும் வெற்றியையும் தந்துள்ளது.

இவ்வுலகம், நில நூல் வழியில் எங்ஙனம், ஒரு பக்கம் கிழக்கு, மேற்கு என்றும் மறுபக்கம் வடக்கு தெற்கு என்றும் இயற்கையை ஒட்டிப் பகுக்கப் பட்டுள்ளதோ அவ்வண்ணமே, உயிரினியல்பும், ஒரு பக்கம் மூன்பும், எதிர்ப்பும், ஆட்சி செலுத்தும் தன்மைகளும், மறுபக்கம் சாத்விகமும், சிந்தனையும், உண்மை நாட்டமும் உள்ளனவாயுள்ளன.

தருதுலக் கைத்தறிகளில்
நெய்த
மேல் சுட்டைகள்
(டவல்கள்)
முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"
வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
தருதுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

இவற்றில், இன்றைய விஞ் ஞானம் எதற்குப் பெரிதும் உதவியுள்ளது என்று தான், தெளிய வேண்டும்.

இன்று, மேலைநாட்டாரின் வழியிலும், அவர் வெற்றி கொண்டு எக்களிப்புக் கொள் ளும் விஞ்ஞான வழியிலும் நிற்க முயலும் நாம் அங்ஙனம் முயலு முன் பல உண்மைகளைத் தெளி யக் கடமைப்பட்டுள்ளோம். இன்று எம் மக்களை மிக்க நாக ரிக முன்னேற்ற முள்ளவர்க ளென்று எண்ணி அவர்களைப் பொருளற்றும் சுய சிந்தனை அற்றும் அப்படியே பின்பற்ற எண்ணுகின்றோமா? அவர்கள் பூர்வத்தையும், பண்பாட்டை யும் எண்ணிப் பார்க்கக் கட மைப்பட்டுள்ளோம். அவர்கள் பெரிதும், உயிர்வர்க்கத்தில் முதலில் குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவராகவே உள்ளார்கள். அவர்கள் புழங்கும் உலகத்தில் வெளிமயக்கே அன்றி உண்மை யும், இயற்கையில் பொருந்திய இயல்பான ஒரு வளர்ச்சியும், இயற்கை வளத்திலுள்ள ஒரு குறிக்கோளும் ஒரு படிப்பினையு முள்ளனவா?

வாழ்வில், கிழமையில் ஒரு நாள்—ஞாயிறு—'ஓய்வு' க்காக வும் நற்சிந்தனைகளாகவும், —உயி ரின் தலைசிறந்த முயற்சிக்காக வும்—ஒதுக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம். அந் நாள் செலவிடப்படும் விதமோ புது மையிலும் புதுமை! அநேமை கையத்திலிருந்து நடுயாமம் வரைக்கும் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகளை எண்ணி 'இவை யன்றோ ஆன்ம முன்னேற்றத் திற்காக அமைந்த நாளில் மேற் கொள்ளப்படுவன' என்பதை எண்ணும்போது அச்சத்தால் மெய் சிலிர்க்கின்றது.

ஆனால் நம் பண்பாடு! அது கிழமையில் அந்த ஒரு நாளில் மட்டுமன்று, அது ஞாயிறு ஆனாலும் சரி, பிறிதோர் நாளானாலும் சரி, மக்களின் வாழ்வில் மிக அருமையானதும், ஆனால் எளி மையானதுமான அந்த எண் ணம்—வாழ்க்கையில் அபூர்வ மாக எழுந்த ஐயம்—எழச் செய்கது. அதுவே, நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? இம்மண் ணில் நம் வாழ்க்கையின் பொரு ளென்ன? வாழ்நாள் நெடுக உழன்று கொண்டும், துன்புற்றுக் கொண்டும் நம் சுய இன்பத்திற் காகவே சுற்றத்தின் இன்பத்தை நசித்து, துன்பத்தைக் கிளர்ந்து கொண்டும் உழன்று வருவதைத் தவிர்த்து வேறு ஒய்வே கிடை யாதா? என்பன போன்றன!

இன்றைய மேற்கத்தியர் அவர் வாழும் மிடங்களையும் நாட் டையும் மின்சாரத்தால் எவ் வளவுக் கெவ்வளவு வசதியாக அமைக்கக் கூடுமோ அவ்வள வுக் கவ்வளவு வசதியுடனமைத் துக் கொண்டு 'இன்பமாய்' வாழ்கின்றார்கள்.

நிலையாத இன்பங்களுக் காக வாழ்க்கை நெடுகப் போராடிப் பொருள் தொகுத்து வரும் அம் மக்களின் வாழ்வில் அமைதி கொள்ளவும், நற்சிந் தனைக ளிருக்கவும் நேரும் பொழுது மிகமிகக் குறைவாக வும், அன்றி மிக்க நெடிய இடையீடுள்ளதாகவுமே இருக் கின்றது. அதையே அன்னா வாலாறு முழுமையும் காண லாம், அவர்கள் போற்றிய, கிரேக்க, உரோம வாலாறும் அத்தகையதே. நீண்ட குளிர் காலங்களும், உழவுத் தொழில் அருகியும் உள்ள அவர்கள் நாட்டை ஓட்டியும், நெடுங்கால மாக அவ்வினத்தாரிடையே எழுந்த உரிமைப் போராட்டங் களையு மொட்டியுமே, அம மக் களின் சுற்போதைய முயற்சி யும், பழக்க வழக்கங்களும், நன்மை தீமைகளும், ஆழமாக வேர் ஊன்றிவிட்டன. அவர் களின் இன்றைய குண இயல்பு களும், பண்பாடும் இத்தகைய சூழலால் பரம்பரைச் சொத் தாக அமைந்துள்ளன.

எனவே, இன்று அன்னர் ஒரு போர் வாழ்க்கையையே மேற்கொண்டதில் வியப்பேது மில்லை! அதுவே அவர்கள் வாழ்க்கையின் 'உயர்ந்த குறிக் கோளாக' மாறிவிட்டது. எனவே அவர்கள் அதற்காகவே கடுகி உழைத்துப் பெருமை கொண்டு மாய்கின்றனர்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்



பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கதர்பவன் முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதராந்தகம். (அஞ்).